JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, BHAVANI

Deposition of LW- - Pw- 5- Witness
for Prosecution

CC.No. 201/2022 Crime No. 329/2022 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | Pw. 5 கிருஷ்ணமூர்த்தி | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 03.06.2026 | | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது சேலம் மாநகரம், சூரமங்கலம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் பவானி வட்டக்காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது, கடந்த 12.08 .022-ம் தேதியன்று 13.00 மணிக்கு பவானி காவல் நிலைய சிறப்பு உதவியாளர் சக்திவேல் என்பவர் நிலையை அலுவலில் இருந்த பொழுது, சித்தாரை சேர்ந்த குமார் என்பவரின் மனைவி கவிதா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண்.329/ 2022, சட்ட பிரிவுகள் 279, 337 IPC கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் புலன்விசாரணைக்காக வழக்கு கோப்பை பெற்ற நிலைய உதவி ஆய்வாளர் ரகுநாதன் என்பவர் அன்றைய தினம் 14.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகளான வரதராஜ் மற்றும் லோகு ஆகியவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜரும், மாதிரி வரைபடமும் தயார் செய்தார். **மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் கவிதா, தீபக், டைனி தாமஸ் சீனிவாசன், வரதராஜ் மற்றும் லோகு ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தார்.

இந்த விபத்தில் காயம்பட்ட குமார் என்பவர் பவானி மெடிக்கல் சென்டர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று பின்னர் ஈரோடு டிரஸ்ட் மருத்துவமனையில்

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.06.03 17:30:47 +0530

சிகிச்சை பெற்றும், பின்னர் கோயம்புத்தூர் KMCH மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பொழுது 15.08.2022–ம் தேதியன்று பகல் 12:30 மணிக்கு இறந்து விட்டதாக கிடைத்த இறப்பு இன்டிமேஷனை பெற்று வழக்கின் சட்ட பிரிவை சட்ட பிரிவுகள் 279, 337 IPC இருந்து சட்ட பிரிவுகள் 279, 304(A) IPC ஆக மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தார். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் அன்றைய தினம் மாலை 16.00 மணிக்கு கோயமுத்தூர் KMCH மருத்துவமனைக்கு சென்று அங்கு இந்த விபத்தில் இறந்து போன குமார் என்பவரது பிரேதத்தின் மீது பஞ்சாயத்துதாரர்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து பிரத விசாரணை அறிக்கை தயார் செய்தார். **பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

இறப்பின் மருத்துவ ரீதியான காரணம் அறியும் பொருட்டு பிரேதத்தை நிலைய முதல் காவலர் ராமலிங்கம் என்பவர் மூலம் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தார். பின்னர் பிரேத விசாரணை சாட்சிகளான அன்பரசு, சிவசுப்பிரமணியம், சந்தோஷ் குமார், ஜோதி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் சாட்சி கவிதா என்பவரை மறுவிசாரணை செய்து மறுவாக்குமூலம் பதிவு செய்தார். 01.09.2022–ம் தேதியன்று தொடர் புலன் விசாரணைக்காக வழக்கு கோப்பை பெற்ற நான் சம்பவ இடம் சென்று பார்வையிட்ட பொழுது சம்பவ இடம் மாதிரி வரைபடத்துடன் ஒத்திருந்ததால், புதியதாக எதுவும் தயார் செய்யவில்லை.

சாட்சிகளை விசாரித்த போது அவர்கள் மேற்படி உதவி ஆய்வாளரிடம் கூறியதையே என்னிடமும் கூறியதால், புதிதாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. எனது விசாரணையில் இருந்தும், சாட்சிகளின் வாக்குமூலங்களில் இருந்தும் சம்பவம் உண்மையான தெரியவந்ததால் அன்றைய தினம் நிலையம் ஆஜராகி குற்றத்தை ஒப்புக்கொண்ட எதிரி குமார் நிலோத் பால் என்பவரை கைதுக்கான காரணம் கூறி கைது செய்தும், தக்க நிலைய பிணையில் விடுவித்தேன்.

பின்னர் வழக்கில் தொடர்புடைய வாகனங்களின் ஆவணங்களை பெற்று மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்தேன். 27.09.2022–ம் தேதியன்று மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.சுகந்தி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, மோட்டார் வாகன ஆய்வு அறிக்கைகள் பெற்றேன். **TN 36 AR 8579 என்ற பதிவு எண் கொண்ட பைக்கின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.த.சா.ஆ.7 ஆகவும், KA 05 AG 2294 என்ற பதிவு எண் கொண்ட காரின் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை அ.த.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

பவானி மெடிக்கல் சென்டர் மருத்துவமனையில் இறந்து போன குமார் என்பவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து விபத்து பதிவேடு பதிவு செய்த மருத்துவர் நவநீதன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேடு கைப்பற்றி **பவானி மெடிக்கல் சென்டர் மருத்துவமனையின் விபத்து பதிவேடு அ.சா.ஆ–9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் ஈரோடு டிரஸ்ட் மருத்துவமனையில் இறந்து போன குமார்

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.06.03 17:30:53 +0530

என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் கிருஷ்ணகுமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு பற்றி **டிரஸ்ட் மருத்துவமனையின் விபத்து பதிவேடு அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

விபத்தில் காயம் பட்ட குமார் என்பவரின் இறப்பை உறுதி செய்து இறப்பு இன்டிமேசன் வழங்கியகோயம்புத்தூர் KMCH மருத்துவமனை மருத்துவர் கேசவமூர்த்தி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து இறப்பு இன்டிமேஷன் மற்றும் விபத்து பதிவேடு பெற்றேன். **இறப்பு இன்டிமேசன் அ.சா.ஆ.11 ஆகவும், கோயம்புத்தூர் KMCH மருத்துவமனையில் விபத்து பதிவேடு ஆ.சா.ஆ.12 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் பேரானந்தம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து கடந்த 27.09.2022–ம் தேதி என்று எதிரி மீது சட்ட பிரிவுகள் 279, 304(A) IPC கீழ் இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்து மூன்று நாட்கள் கழித்து தான் குமார் என்பவர் இறந்தார் என்றால் சரிதான். சட்டப்பிரிவு மாறுதல் செய்த பிறகும் உதவி ஆய்வாளர் தான் விசாரித்தார் என்றால் சரிதான். நான் 01.09.2022 ஆம் தேதி தான் புலன் விசாரணைக்காக கோப்பினை எடுத்துக் கொண்டேன் விபத்து நடந்ததாக சொல்லப்படும் சாலையானது போக்குவரத்து அதிகம் உள்ள பகுதி என்றால், சரிதான்.

இந்த வழக்கில் இறந்து போன நபர் ஓட்டி சென்ற வாகனம் அவருடையது இல்லை என்றால் சரியல்ல அவருடையது தான் அவர் ஓட்டிச் சென்ற வாகனம் அதிக குதிரை திறன் கொண்ட வாகனம் என்றால், சரியல்ல. சம்பவ இடத்தில் வாகனம் எவ்வளவு வேகத்தில் செல்கிறது என்பது குறித்து எந்த கருவியும் அங்கு இல்லை என்றால், சரிதான். சம்பவ இடத்தில் வாகனத்தின் டயர் மார்க் எதுவும் இல்லை என்றால், சரிதான். சம்பவ இடத்திற்கு அருகில் கடைகள் உள்ளது என்றால் சரிதான்.

அங்கிருந்து சிசிடிவி பதிவுகள் எதுவும் கைப்பற்றி இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கடையில் சிசிடிவி பதிவுகள் எதுவும் பொருத்தப்படவில்லை எனது விசாரணையில் தீபக் என்பவர் இந்த வழக்கில் இறந்து போன நபரின் உறவினர் என்கிற விவரத்தை நான் தெரிந்து கொண்டேன் என்றால் அவர் உறவினர் இல்லை தீபக்கும் ஜெயந்தி தாமஸும் நண்பர்கள் என்கிற விவரத்தை எனது விசாரணையில் நான் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான்.

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.03 17:31:02 +0530

நான் சொல்வது தவறு என்றாலும் போக்குவரத்து அதிகம் உள்ள பகுதியில் வாகனத்தை வேகமாக இயக்க இயலாது என்றாலும், இந்த வழக்கில் இருந்த நபர் தான் வாகனத்தை அஜாக்கிரதையாக இயக்கி விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல. நான் முறையாக புலன் விசாரணை செய்யாமல் இந்த குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

நான் முதல் விசாரணையில் சொல்வது போல் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் எதுவும் பெறப்படவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும், சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றாலும், வழக்கு ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரியின் கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல

**மறுவிசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.03 17:31:08 +0530

Sd/- (J.RAJKUMAR)

Judicial Magistrate No.1, Bhavani